பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத வரு பங்குனீ 14 உ வியாழக்கிழமை [28-03-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 121

# போரை நிறுத்துவதற்கு அரசதரப்பினர் ஆர்வம்

## கைலாசநாதர் தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் தேர்த் திருவிழா இன்று காலை சிறப்பாக நடைபெற உள்ளது.

காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் வசந்த மண்டபப் பூசையின் பின்னர் காலை 9 மணிக்கு கைலாநாதர் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். [அ]

## புதிய நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பமாகும் போது அறிவிப்பு வருமா?

கொழும்பு, மார்ச் 28

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி ஆரம்பமாவதற்கு முன்னர் இப்போது நடக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டிவருகிறது.

அரசாங்க உயர்மட்டங்களுடன் நெருங்கிய தொடர்புடைய வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

உயிர்ச் சேதம், உடைமை நாசம் ஆகியவற்றை விளைவிக்கும் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்பதில் அரச வட்டாரங்கள் இப்போது மிகவும் அக்கறை உடையனவாக இருப்பதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் உள்ள இடைவெளியில் யுத்தத்தை நிறுத்துவதில் முன்னேற்றம் காண முடியும் எனவும் அரசு நம்புகிறதாம்.

இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னார் கரையோரத்தில் தொடர்ந்து கடும் மோதல்?

மன்னார் மாவட்டத்தின் வட மேற்குக் கரையோரப் பகுதியால் முன்னேற முயலும் ஸ்ரீலங்கா படையினருடன் விடுதலைப் புலிகள் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

சிலாவத்துறை முருங்கன் பகுதிகளிலேயே இந்த மோதல்கள் இடம் பெறுகின்றன. இராணுவத்தரப்பில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

பீரங்கி பூட்டப்பட்ட ஹெலிகள் பரவலான தாக்குதல் நடத்தியுள்ளன. சேத விவரங்கள் தெரியவில்லை [உ-5]

## தென்பகுதித் தூதுக் குழு இங்கே வர விருப்பம்

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முன் முயற்சிகளைக் கண்டறிவதற்கு தென் இலங்கையிலிருந்து நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் வர விருக்கிறது.

தென் இலங்கையில் உள்ள மெதடிஸ்த சபையின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்றே யாழ்ப்பாணம் வர விருப்பம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பொது அமைப்புக்களுடனும், விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடனும் பேச்சுக்கள் நடத்தி இங்குள்ள உண்மை நிலையையும், தீர்வுக்கான வாய்ப்புகளையும் இக் குழு கேட்டறியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## ராஜீவ் - வரதராஜ பெருமாள் ஏப்ரல் நடுப்பகுதியில் சந்திப்பு

சென்னை, மார்ச் 28

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தியை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் சந்தித்துப் பேசுவார்.

ஏப்ரல் நடுப்பகுதியில் மத்திய பிரதேசத்தில் தேர்தல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சமஷ்டி அமைப்புக்குறித்து லண்டனில் விசேட மாநாடு

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி அமைப்பு முறை என்னென்ன வகைகளில் பொருத்தமுடையது என்பது பற்றி ஆராய்வதற்கு லண்டனில் அடுத்த மாதம் விசேட மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அக்கறையுள்ள லண்டன் பிரமுகர்களே இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளனர்

சமஷ்டி முறை நடைமுறையில் உள்ள நாடுகளின் அமைச்சர்களும், அது பற்றிய அமைப்பு ரீதியான அரசியல் வல்லுநர்களும் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். [அ-3]

# தமிழீழ வரலாற்றில் என்றுமே நடந்திராத மிகப் பெரிய போர்

## சிலாவத்துறைத் தாக்குதல் குறித்து புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழீழ வரலாற்றிலே முதன்முறையாகவான்படை, கடற்படை உட்பட மூன்று பெரிய முகாம்களில் இருந்து வெளிவேறிய படையினருடன் மோதிய வண்ணம் சிலாவத்துறை முகாம் மீது தாக்குதல் நடத்தி சிங்களப் படையினருக்கு பாரிய இழப்பு ஏற்படுத்தி உள்ளோம்.

சிலாவத்துறை முகாம் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை விவரம் வருமாறு:

19-3-91 இல் இருந்து 22-3-91 வரை நான்கு நாட்கள் தொடர்ந்து சிலாவத்துறை முகாம் மீது எம்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கல்விச் சேவை தரம்III: விண்ணப்ப முடிவு நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 3 ஆம் தரத்துக்கு உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பும் இறுதித் தினம் ஏப்ரல 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது,

ஆசிரியர்கள். அதிபர்கள் இதற்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகமைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

தளர்த்தப்பட்ட அடிப்ப

[6ஆம் பக்கம் பார்க்க]

## எய்ட்ஸ் பற்றி எம்.பிக்களுக்கு விளக்க விசேட மாநாடு!

கொழும்பு, மார்ச் 28

நாட்டில் எய்ட்ஸ் நோய் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் குறித்து எம். பிக்களுக்கு விளக்கம் அளிக்கும் நோக்கில் மே மாதத்தில் மாநாடு ஒன்று நடத்தப்படும்.

கொழும்பில் கடந்த திங்களன்று எயிட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றியபாலியல் நோய்கள் தடுப்பியக்கத்தின் தலைவர் டாக்டர் காமினி ஜயகுரு இத்தகவலை வெளியிட்டார்.

"எய்ட்ஸ் நோய் தெற்காசிய நாடுகளில் பெரும் பிரச்சினையைத் தோற்றுவிக்கப் போகிறது இதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். உரிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

இதற்கு அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பைப் பெறவே மேற்படி மாநாடு நடத்தப்படுகிறது"—என்றார் அவர்.

## படையினரால் கொலையுண்ட 4பேரின் சடலங்கள் கிணற்றில்

### மணற்சேனையில் சம்பவம்

திருகோணமலை மாவட்டம் மணற்சேனையில் தோப்பூர்ச் சந்தி இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் நான்கு பேரின் சடலங்கள் கிணறு ஒன்றிலிருந்து கடந்த சனியன்று மீட்கப்பட்டதாக அறியவந்தது.

கொலையுண்ட நால்வரில் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

படையினரால் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சுந்தரம் நாதன் (மணற்சேனை) என்பவரின் சடலமே அடையாளம் காணப்பட்டது. [உ]

## முச்சந்தி முரளி



உவையளுக்கு விளங்கிற நிலை ஏதோ விசயம் இருக்குது போலை ....!

## ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை: பரீட்சை நிலைய மாற்றம்; 4 ஆம் திகதி வரை அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பின்னர், தத்தமது இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் தமது தற்போதைய இடங்களில் விசேட பரீட்சைக்குத்தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் நான்காம் திகதி வரை இதற்கு விண்ணப்பிக்கலாம்.

பரீட்சை நிலைய மாற்றம் தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான கால எல்லை இத்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கிலிருந்து விசேட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தத்தமது மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கு ஏப்ரல் நான்காம் திகதிக்கு முன்னர் விண்ணப்

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமலைத் தமிழர் அச்சத்துடன்; நகரில் இரவு நேரத்தில் ஆட்கடத்தல்!

திருகோணமலையில் வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானோர் இன்னமும் மனப் பதற்றமும், அச்சமும் நிறைந்த நிலையிலேயே வாழ்கின்றனர். வாழ்க்கை வழமையாக ஓடிக்கொண்டிருப்பது போல பார்வைக்குப் பட்டாலும் அப்பகுதிகள் சோர்வும், விரக்தியும் தரும் இடங்களாகவே காணப்படுகின்றன.

இங்குள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர். அகதிகளில் பெரும்பாலானோர் தமிழர்கள். அவர்களில் பெரும்பாலானோர் இராணுவம் தமது பகுதிக்கு வருமுன்னரே வீடுகளை, இருப்பிடங்களை விட்டு ஓடிவிட்டனர்.

இங்குள்ள பெரிய அகதி முகாம் பழைய விமானத் தளம் ஒன்றில் அமைந்துள்ளது. அதன் நிலைமையோ படுமோசம். தொடர்ந்து

> கொழும்பில் உள்ள பி. பி. சி செய்தியாளர் அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தார். அங்குள்ள நிலைமை குறித்து அவர் வழங்கிய கருத்துக்கள் தமிழோசையில் ஒலிபரப்பாகின. அதன் தொகுப்பே இதுவாகும்.

நடைபெற்று வரும் மோதல்களுக்குள் அகப்பட அஞ்சி மக்கள் தமது கிராமங்களுக்குச் செல்ல அஞ்சுகின்றனர் இங்குள்ள வயல் நிலங்களெல்லாம் பாழாகிக் கிடக்கின்றன.

நிலைமை விரைவில் மாறிவிடும் என்று இராணுவத் தரப்பில் நம்பப்படுகிறது. தினமும் சோதனை நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு அடையாளம் காண்பதற்காக முகமூடி அணிந்தவர்களின் முன்னால் நிறுத்தப்படுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை சாதாரண மக்களிமிருந்து பிரித்து எடுப்பதற்கு இந்த நடவடிக்கை அவசியம் என அங்குள்ள இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

இரவுகளில் கறுப்பு "ரீசேட்" அணிந்த ஆட்கள் வீடுகளில் இருந்தும், அகதி முகாம்களில் இருந்தும் ஆட்களைக் கடத்திச் செல்வது பற்றி திருகோணமலை நகர மக்கள் இரகசியமாகப் பேசிக்கொள்கின்றனர்,

அதே வேளை —

தமிழர்கள் தங்கியுள்ள அகதி முகாம்களில் பெண்கள், குழந்தைகள். வயோதிபர்கள் ஆகியோரே காணப்படுகின்றனர் அங்கிருந்த இளைஞர்கள் மறைந்து போய்விட்டனர், ஒன்று அறிய வந்தது

'காணமற்போன' இளைஞர்கள் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம், இல்லையேல் கொல்லப்பட்டிருக்கலாம். அவர்களில் சிலர் தாமாகவே விடுதலைப் புலிகளின் படைகளிலும் சேர்ந்திருக்கலாம் என்று அங்குள்ள நிவாரணப் பணியாளர் ஒருவர் கூறினார்.

திருகோணமலைப் நகரப் பகுதியில் முன்னர் நடந்த சண்டையால் மட்டும் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அங்கு தற்போது எஞ்சியிருப்பவர்களும் தமக்கும் அதே கதி எப்பொழுது ஏறபடுமோ என அஞ்சி நடுங்கியபடியே வாழ்கிறார்கள். [அ-5]


சன்மார்க்க சபை குரும்பசிட்டி

தமிழ்த்தொண்டர்

"ஈழகேசரி" நா. பொன்னையா

## நாற்பதாவது நினைவுதினம்

இடம்: கம்பன் கோட்டம் நல்லூர்

காலம்: 31 - 03 - 1991 ஞாயிறு காலை 9-00 மணி

தலைமை: கலாகேசரி ஆ தம்பித்துரை அவர்கள்

நினைவுப்பேருரை

யாழ்ப்பாணத்தில் 'தொடர்பும்' பண்பாடும்

-1930 ஆம் தசாப்தத்து ஈழகேசரிப் பத்திரிகையைத் தளமாகக்கொண்ட ஒரு தொடர்பியல் நோக்கு

கலாநிதி காத்திகேசு சிவத்தம்பி அவர்கள்

தமிழ்ப்பேராசிரியர்

[தலைவர், நுண்கலைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரசாரப்பிரிவு, குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

க. இராமனாதன், பிரசாரசெயலாளர். [16236]



## ★ மழலை ★ புகைப்பட நிலையம்

முத்தமிழ் விழாவை முன்னிட்டு இதுவரை காலமும்

"பேபி போட்டோ"

என்றபெயரில் இயங்கி வந்த எமது புகைப்பட நிலையம் தற்போது தமிழில் மாற்றப்பட்டு

மழலை புகைப்பட நிலையம்

என இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்

உங்கள் மழலைச் செல்வங்களின் உயிரோவியமான படங்களுக்கு

மழலை புகைப்பட நிலையம்,
பல்கலைக்கழக சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [16227]



இணுவில் சிவகாமி அம்மன் ஆலய

## இரதோற்சவம்

இன்று காலை 8-30 மணிக்கு [வியாழன் 28-03-91] இரதோற்சவமும் காலை 11 00 மணிக்கு அம்மனுக்கு பச்சைசாத்தப் பெற்று ஆராதனையும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். நாளை காலை 8-00 மணிக்கு [வெள்ளி 29-03-91] தீர்த்தோற்சவம் நடைபெறும் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

மூ. சிவலிங்கம்,
பரிபாலகர்

[16240]



## வைத்திய சேவை ஆரம்பம்

கிளிநொச்சியில் பல காலம் சேவை செய்த

★ லக்ஷ்மி வைத்தியசாலை ★

85, கொழும்புத்துறை, வீதி, கொழும்புத்துறையில் 30 - 03 - 1991 முதல் ஆரம்பிப்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

டாக்டர் க. தணிகாசலம்,
எம். பி. பி. எஸ். [இலங்கை]

[16221]


## புகையிலைச் செய்கையாளர் நஷ்டம்

உரும்பராய், மார்ச் 28

புகையிலைச் செய்கையில் ஈடுபட்டவர்களில் பலர் இந்த வருடம் நஷ்டமடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

மண்ணெண்ணெய் விலை அதிகரித்ததனால் பராமரிப்புச் செலவு அதிகரித்தது. இதே வேளை இலை சுருட்டி நோயினால் புகையிலைச் செடிகள் பாதிக்கப்பட்டன தாம் முதலிட்ட பணத்தில் அரைப்பங்காவது மீளப்பெற முடியுமா என்பது சந்தேகம். என்று கூறிய விவசாயி ஒருவர் புகையிலைக்கு பதிலாக வேறு ஏதாவது உப உணவுப் பயிர்களைப் பயிரிட்டிருக்கலாம் என்று கவலையுடன் தெரிவித்தார்.

## மயிலிட்டி அகதிகளில் 40 குடும்பங்களுக்கு உதவி

காங்கேசன்துறை, மார்ச் 28

இராணுவ நடவடிக்கையால் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கிழக்கில், நாகர்கோவிலில் அகதி முகாமில் தங்கியுள்ள நாற்பது குடும்பங்களுக்கு கடன் அடிப்படையில் பணம் வழங்கப்பட்டது

அகதிகள் புனர்வாழ்வு நிதியம், தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் ஊடாக மொத்தம் 67 ஆயிரம் ரூபாவை வழங்கியது.

சுயதொழில் ஆரம்பிக்க இந்த கடன் பயன்படுத்தப்படும். [இ-68]

## ஜூனில் யுத்தத்தை முடிக்க ரஞ்சன் திட்டமிட்டாராம்

கொழும்பு. மார்ச் 28

வடக்கு-கிழக்கு சண்டையை எதிர்வரும் ஜூன் மாதத்தில் முடிவுக்குக் கொண்டு வர மறைந்த பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா திட்டமிட்டிருந்தாராம்.

இத்தகவலை, அவரின் இடத்திற்கு புதிதாக எம் பியாக நியமிக்கப்பட்ட அவரது ஒரே மகன் திரு. ரொஹான் விஜேரத்தினா வெளியிட்டார்.

'தந்தை கொலையுண்டதகவலைக் கேள்விப்பட்டதும் நீங்கள் என்ன நினைத்தீர்கள்' என்று கேட்டதற்கு 'விடுதலைப் புலிகள் தான் இக்கொலையைச் செய்திருப்பார்கள் என்றுஎண்ணினேன்' என்றும் திரு. ரொஹான் விஜேரத்தினா கொழும்பு ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். [இ - எ]

## நந்தாவில் அம்மன் கும்பாபிஷேகம்

கொக்குவில், மார்ச் 28

கொக்குவில, நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம், பூரணகிரியைகளுடன் நேற்று புதன்கிழமை வெகு சிறப்பாக நடந்தேறியது

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்களுக்கான மண்டலாபிஷேகமும் இன்று ஆரம்பமாகின்றன.

இம்மாதம் பத்தாம் திகதி நடைபெற்ற கூட்டத்தில், வழிபடுவோர் சங்கத்திற்கும், பரிபாலன சபையினருக்கும் இடையில் ஏற்பட்ட சமரசத்தைத் தொடர்ந்து ஆலய பரிபாலனத்தை முன்னெடுத்துச் செல்ல 15 பேர் கொண்ட பொதுச் சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது.

வருங்காலத்தில் ஆலயச் செயற்பாடுகளை நெறிப்படுத்துவோருக்கு வழிகாட்டலாக புதிய யாப்பு ஒன்றை இயற்றும் பொறுப்பும் இந்தப் பொதுச் சபையிடம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய யாப்பு அன்பு, ஒற்றுமை, அகிம்சை ஆகியவற்றை அடிப்படையாகவும், ஆலய வளர்ச்சியையும், பக்தி மார்க்கத்தைப் பரப்பும் குறிக்கோளுடனும் இயற்றப்பட வேண்டும் என்று அன்றைய கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது [அ 69]

## அபராதம்

கொடிகாமம், மார்ச் 28

சன்லைட் சவர்க்காரம் ஒன்றை 20 ரூபாவுக்கு விற்ற வருக்கு புலிகளினால் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

இச் சம்பவம் கொடிகாமம் சந்தைப் பகுதியில் இடம்பெற்றது.

பிரஸ்தாப நபரிடம் இருந்து கைப்பற்றிய எஞ்சிய சவர்க்காரத்தை விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டு விலைக்கு பொது மக்களுக்கு விற்றனர். [இ-75]

## சைக்கிள் விலை வீழ்ச்சி

கோப்பாய் மார்ச் 28

வவுனியாப் பகுதியிலிருந்து தற்போது பெருமளவு சைக்கிள்கள் யாழ்பாணத்துக்குக் கொண்டு வரப்படுவதால் இவற்றின் விலை தற்போது வீழ்ச்சி அடைந்துள்ளது. [இ-72]


யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

30 3.1991 சனிக்கிழமை நடைபெற இருந்த மேற்படி கூட்டம் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை பாடசாலையில் நடைபெற இருப்பதால் 31. 3 1991 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி வேண்டிக் கொள்கிறோம்.

[16242] செயலாளர்.



## மரண அறிவித்தல்

சரவணமுத்து செல்வராசா

காலம் சென்ற சட்டத்தரணி சரவணமுத்தினதும் மீனாம்பிகை சரவணமுத்துவினதும் மகனும் காலம் சென்ற வள்ளிநாயகியின் அன்புக் கணவருமான சட்டத்தரணி செல்வராசா காலமாகி விட்டார்.

அன்னார் சத்யபாமா சோமசுந்தரம், சரவணமுத்து, நித்தியானந்தன், நளாயினிசிவநாத், சிறிகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரிந்தா, சிவகுமார், நகுலினி, ஆனந்தன், அரவிந்தன், அபிராமி, கிருத்திகா, ஆரத்தி ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை 28 - 3 - 91 அன்று பிற்பகல் 2 மணி அளவில் இலக்கம் 4, செட்டித்தெரு ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று, செம்மணி மயானத்திற்கு தகனத்திற்கென எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நித்தியானந்தன்
[மகன்]

[16241]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## S. L. E. A. S.
(Open & Limited)

### துரித பயிற்சி வகுப்புகள்

பாடங்கள்:

1. நுண்ணறிவு
2. கிரகித்தல்
3. கல்வி நிர்வாகம் பற்றிய நிகழ்வுக் கற்கை

கல்விச் சேவையிலுள்ள விரிவுரையாளர்கள்

**ஆரம்பம்: 30-03-1991**
8-30 மணி

முழுக்கட்டணம்: 250/-

★ Limited Number in Each Class
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
★ மாதிரி வினா - விடைகள் இலவசம்

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
16, 3rd CROSS STREET,
JAFFAN. (சி-5886)



## விசேட அறிவித்தல்
## S. L. E. A. S. (Ltd.)

விண்ணப்ப முடிவு திகதி Apr.-10 வரை நீடிக்கப்பட்டுள்ளது

இது வரை விண்ணப்பிக்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

போட்டிப் பரீட்சைக்கான

விசேட பயிற்சி வகுப்புகள் 2ஆம் பிரிவு

**ஆரம்பம்: 30 — 03 — 1991 (10 a.m.)**

பாடநெறி: கிரகித்தல், நுண்ணறிவு, கல்வி நிருவாகம் (விடய ஆய்வு)

தகைமைகள்:

1. பட்டதாரி/ஆசிரியப் பயிற்சி சான்றிதழ் உடையோராயின் 5 வருட சேவை அல்லது
2. ஆசிரியப் பயிற்சி சான்றிதழ் பெற்ற பட்டதாரி ஆசிரியர், அல்லது
3. 10 வருடம் சேவையாற்றிய பயிற்சி பெற்ற ஆசிரியர், அல்லது
4. நடனம், சங்கீதம், கைத்தொழில், உடற்கல்வி, சித்திரக்கலை, மனையியல் ஆசிரியர்களாயின் 5 வருட சேவை.

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் மட்டும்.
★ இலவச பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 300.00

விவரங்களுக்கு: நேரில் மு. ப 9 00 — 12-00

## ASTAN INSTITUTE
101/10, Stanley Road, JAFFNA
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
(இ-4813)


யாழ்ப்பாணம் மாநகரசபை

## கடை வாடகைகள் பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகரசபைக் கடைகளுக்குரிய வாடகை நிலுவைகளை உடன் செலுத்துமாறு சகல வாடகைக்காரரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 1991 ஏப்பிரல் மாதம் தொடக்கம் வாடகைகள் யாவும் அதற்குரிய மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன் கட்டாயமாகச் செலுத்தப்படவேண்டும். அதன்பின் செலுத்துவோர் வாடகை ஒப்பந்தத்தின் 18 ஆவது சரத்தின்படியான 10% (பத்து சதவீத) மேலதிகக் கட்டணமும் சேர்த்துச் செலுத்தல் வேண்டும். வாடகைகளை உரிய தவணைக்குச் செலுத்தாமலும், சட்டபூர்வமான ஒப்பந்தம் அமுலில் இல்லாமலும் சபைக் கடைகளை வைத்திருப்போரை எதுவித அறிவித்தலுமின்றி வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதால், சம்பந்தப்பட்ட சகலரும் சபையுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.
25 - 03 - 1991

(இ/5889)

### 89ஆம், 90ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு:

# வருட இறுதிக்குள் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடிவு

## இல்லையேல் பணம் திரும்பிவிடுமாம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்டத்துக்கென 1989 ஆம், 1990 ஆம் ஆண்டுகளுக்கு, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இருந்து வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கான வேலைகளை இவ்வாண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்யுமாறு திணைக்களத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் இவ் விடயம் அறிவிக்கப்பட்டது.

புனரமைப்பு வேலைகளுக்கென பணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 18 திணைக்களங்களின் தலைவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

1989, 1990 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் ஒதுக்கப்பட்ட முழு நிதிக்குரிய வேலைகளை இவ்வாண்டு இறுதிக்குள் பூர்த்தியாக்கும்படியும் இல்லையேல் நிதி வாபஸ் பெறப்படும் எனவும் கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த வேலைத் திட்டங்களை செவ்வனே பூர்த்திசெய்ய நிதி ஒதுக்கீடு போதுமானதல்ல என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து தற்காலிக வேலைகளையாவது பூர்த்தி செய்வது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிதியில் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு மட்டும் உடனடியாக 40 லட்சம் ரூபாவுக்கும் மேல் தேவைப்படும் என்றும், எனவே பாடசாலைகளில் தற்காலிக திருத்த வேலைகளைச் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### 968 குடும்பங்களுக்கு

## பருத்தித்துறை வங்கியில் ரூ. 4 ஆயிரம் நிவாரணம்

பருத்தித்துறை, மார்ச் 28

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை 968 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சி உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடை நிவாரணம் (ரூ. 4ஆயிரம்) வழங்கப்படவுள்ளது.

நிவாரணம் வழங்கப்படவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளும் குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

★ வியாபாரிமூலை:- 468
★ அல்வாய் வடக்கு:- 26
★ அல்வாய் மேற்கு:- 27
★ கெருடாவில் வடக்கு:- 03
★ கெருடாவில் தெற்கு:- 32
★ குடத்தனை:- 25.
★ குடத்தனை கரையூர்:- 09
★ மந்திகை:- 50.
★ மருதங்கேணி:- 12.
★ பருத்தித்துறை:- 58.
★ பருத்தித்துறை கிழக்கு:- 20
★ பொலிகண்டி கிழக்கு:- 47
★ பொலிகண்டி மேற்கு:- 48
★ புலோலி தெற்கு:- 37
★ புலோலி மேற்கு:- 51
★ வல்லிபுரம்:- 43.
★ வல்வெட்டித்துறை:- 12

இத்தினத்திற்கு பின்னர் இக் கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படமாட்டாது என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-118)

### யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கான விடுதி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு கொழும்பில் விடுதியாகவும், அலுவலகமாகவும் உபயோகிப்பதற்கு வீடு ஒன்று தேவைப்படுகின்றது. அடிப்படை வசதிகளைக் கொண்ட வீடு ஒன்றினை வாடகைக்கு/குத்தகைக்குக் கொடுக்க விரும்புவோர் 01-05-91 ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வீடு கொழும்பு 2, 3, 4, 5, 6, 7 இலக்க வலயங்களுக்குள் அமைந்திருத்தலும், 1000 சதுர அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதும், கராஜ், தொலைபேசி போன்ற வசதிகளைக் கொண்டுள்ளதும் விரும்பத்தக்கது.

விண்ணப்பிப்போர் தமது முகவரி, வாடகைக்கு/குத்தகைக்கு தரும் வீட்டின் முகவரி, வீட்டின் முழு விவரங்கள் யாவற்றையும் விண்ணப்பத்தில் குறிப்பிடுவதுடன் எதிர்பார்க்கும் வாடகை, முற்பணம் என்பனவற்றையும் குறிப்பிட்டு விண்ணப்பத்தை தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சேர்ப்பிக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வாடகைக்கு வீடு' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

க. பரமேஸ்வரன்,
பதிவாளர்.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[illegible]-03-1991. (இ/5878)


## முக்கிய அறிவித்தல்

ஆர். வி. ஜி. பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறிய வந்துள்ளோம். போலி ஆர். வி. ஜி. பீடிகள் விலையிலும், தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

அசல் ஆர். வி. ஜி. பீடிகள் எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன.

குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர். வி. ஜி. பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

### ஆர். வி. ஜி. நிர்வாகம்
58, குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(16167)


### யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பக் கழகம்
வட்டுக்கோட்டை.

## வெற்றிடம்

**கணக்கு எழுதுவினைஞர் பதவி (Accounts Clerk) (பயிலுநர்)**

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் விண்ணப்பதாரர்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

கணக்குப் பதிவு மற்றும் பொதுவான எழுதுவினைஞர் வேலை ஆகியவற்றைத் தெரிந்திருப்பது சாதகமான அம்சமாகக் கருதப்படும்.

ஜி. சீ. ஈ. உயர்தரத் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம்: பேசித் தீர்மானிக்கக் கூடியது.

வயது : சுமார் 30 வயது

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

இயக்குநர்,
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பக் கழகம்,
Jaffna College Institute of Technology,
வட்டுக்கோட்டை.

முடிவுத் திகதி: இந்த அறிவித்தல் வெளியான திகதியில் இருந்து பத்துத் தினங்கள்.

—இயக்குநர்.

(இ-5890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### A/L பொருளியல்

1992 புதிய பாடத்திட்டத் திற்கமைவான மாணவர் பயிற் சிக் கைநூல் வெளிவந்து விட் டது. ஆக்கியோன்: V. கரு ணாகரன் B. A. Hons வியா பாரிகள், மாணவ மன்றத் தினர் கழிவு விலையில் பெற லாம். தொடர்பு: 215, நாவ லர் வீதி, யாழ்ப்பாணம். [16226]

### வினாத்தாள் விற்பனை

ஆண்டு 5 [புலமைப்பரிசில் பரீட்சைக்கான] கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங் களுக்குரிய வினாத்தாள்கள் [புள்ளியிடும் திட்டம், விடை களுடன்] விற்பனைக்குண்டு. Bond Institutes 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பா ணம் [16224]

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பி, பேப்பர், போத் தல், பித்தளை, செம்பு, ஈெமத்து, கோழித்தின், வெற் றுப்பைகள் வாங்கப்படும். விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி, முரசொலி க்கு முன் லேன். யாழ்ப் பாணம். [16045]

### புளொக் புகைப்படம்

புளொக் [Block] புகைப படம் - றபர்சீல் - கலர் படம் - ஓவியம்-பிறேம்போடு தல் - கலர் பிலிம் கழுவ்கள்- ரீக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள்! கொழும்பு ஸ்ரூ டியோ, யாழ்ப்பாணம். [இ-5814]

### தவறிவிட்டது

சின்னப்பிள்ளை கணேசரத் தினம் ஆகிய எனது அடை யாள அட்டை 333190842V நெல்லியடியில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தயாளினி ஸ்ரோர்ஸ், நெல்லியடி அல் லது உதயன் காரியாலயத் தில் ஒப்படைக்கவும். [16234]

### தேவை

பாவித்த சம்போ, ஓடிக் கலோன், Gum [கம்] Vicks போத்தல், பவுடர் டப்பா, போல்ப்பொயின்ட் பேனா சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும். S. சத்தி யன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு ஸ்ரூடியோ பின் புறம், யாழ்ப்பாணம். [இ-5867]

### சிக்மா பம்ஸ்

உங்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களை அதி விரை வில் திருத்தி புனரமைத்துக் கொள்ளவும், உதிரிப் பாகங் கள் வாங்கவும் நாடுங்கள். யுனைட்டட் அக்றோ என்ஜி னியரிங் 274/1, ஆஸ்பத்திரி வீதி. [பெரியாஸ்பத்திரி முன் பாக] யாழ்ப்பாணம். [சி-4807]

### புலமைப்பரிசில் வகுப்புகள்

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரி வகுப்புகள் தூர இடங்களுக்கான மாணவரின் வசதி கருதி சனி, ஞாயிறு காலை 10-30 — 12-30 வரை நடைபெறும். வகுப்பு ஆரம் பம்: 30 - 3 - 91 சனி மு.ப. 10-30 மணி குறிப்பிட்ட தொகை மாணவரே சேர்த் துக் கொள்ளப்படுவர். ஆண்டு 4 இற்கும் வகுப்பு கள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16237]

### மணமகள் தேவை

யாழ். இந்து 32 வயது B. Sc. கணக்காளராக லண்ட னில் வசிக்கும் மகம் நட்சத் திரம் உடைய மணமகனுக்கு படித்த அழகிய 26 வயது 5'6'' உயரமான மணமகள் தேவை. லண்டனில் உள்ள வர்களும் லண்டனுக்குச் செல் லக்கூடியவரும் சகல விவரங் களுடன் விண்ணப்பிக்கவும். சி. விவேலிங்கம், ',யமுனா.' ஆனைக்கோட்டை. [16238]

### விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் இன வெள்ளை நிறமுடைய நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 48/1, முதலாம் ஒழுங்கை, [மக் ரவல்ஸ் லேன்] பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [16239]

### மல்லிகை விற்பனையாகின்றது

மார்ச் இதழ் வெளிவந்து விட்டது. இவ்விதழில் 'வர தரின் தீவாத்தியார்' தொடர் ஆரம்பமாகியுள்ளது. தர மான எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்து படிக்கத் தவறாதீர்கள். புத் தகசாலைகளில் கிடைக்கும். [இ/5891]


## அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். வண். ஸ்ரீ வைத்தி லிங்கப் பாடசாலை அபி விருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

அதிபர் திரு. கதிர் செல்வ நாயகம் தலைமையுரை நிகழ்த்தினார்.

பெற்றோர்களும், நலன் விரும்பிகளும் அதிக அளவில் கலந்து கொண்ட இக்கூட்டத் தில் திரு. கி. குமாரசாமி, திரு. ம. ஆனந்தராசா, திரு. மா. கணபதிப்பிள்ளை ஆகி யோரும் உரை நிகழ்த்தினர்.

## வவுனியாவுக்கு தீவுப்பகுதி வெங்காயம்

அராலி மார்ச் 28

இம்முறை பெரு விளைச்சல் கண்டுள்ள தீவுப்பகுதி வெங் காயம் தினமும் அராலித் துறை வழியாக எடுத்து வரப் பட்டு வவுனியாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. [இ-12]


## ஈராண்டு நினைவஞ்சலி



### அமரர் குலசிங்கம் ராஜ்குமார்

[Union Trust and Investments Ltd., Jaffna - Branch]

மலர்வு: 09 - 02 - 1964

உதிர்வு: 28 - 03 - 1989

ஈராண்டு சென்றது
மறையவில்லை உன் நினைவுகள்
தொடர்கின்றன அவை மேலும்
யாண்டு பல வாழவில்லை - ஆனால்
சாதித்தாய் பலவற்றை
உன்ஊரில் நிறைந்த நல்
வாருணியானாய் என யாரும்
சொல்ல வாழ்ந்து மறைந்தாய்
இறையடிக் கீழ் நீ சாந்தி
பெறவும் உன்னைப் பிரிந்து
துயருறும் நாம் அமைதி பெறவும்
பிரார்த்திக்கும்:

பப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

மல்லாகம் வீதி,
கட்டுவன்,
தெல்லிப்பழை. [16199]

## கண்ணீர் அஞ்சலி



### ● வீரவேங்கை கஸ்ரோ ●
### [நடேசப்பிள்ளை செந்தூரன்]

[யாழ். மத்திய கல்லூரி, 90 ஆம் ஆண்டு கணித மாணவ[ன்] தலைவன்]

தாயின் மடியில்: 8 - 11 - 1971

தாயக மீட்பில்: 21 - 3 - 1991

கஸ்ரோ; சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்கு தலின்போது வீரமரணத்தை தழுவிக்கொண்டார். இவருடன் வீரமணம் அடைந்த ஏனைய வீர வேங்கை களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

18, பெருமாள் கோவில், தெற்கு லேன்,
யாழ்ப்பாணம். [16235]

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணம் பல் கலைக் கழகத்தின் கைதடி சித்த வைத்தியப் பகுதியில் சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்காக இலங்கை யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நிதியாளரினால் 1991 - 04 - 10 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பொறியிடப்பட்ட கேள் விகள் ஏற்றுக்கொள்ளப் படும்

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/- உம், மீளளிக்கப் படாத கட்டணமாக ரூபா 50/ உம் பல்கலைக் கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட் டினைச்சமர்ப்பித்துக் கேள் விப் படிவங்களை இப் பல் கலைக்கழக நலச் சேவை கள் கிளையிலிருந்து பெற் றுக்கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட கேள்விப் படி வங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

மேலதிக விவரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

25-03-1991 [இ-5887]

## நீங்காத நினைவில் 2 ஆம் ஆண்டு



### அமரர் V. K. ஆறுமுகம்

[இளைப்பாறிய பொலிஸ் அத்தியட்சகர்]

மலர்வு: 19 - 8 - 1911

உதிர்வு: 28 - 3 - 1989

எம் இதயக் கோவிலில், என்றென்றும் நீர் இருப்பீர். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக் கிறோம்.

குடும்பத்தினர்.

''மீனா பவனம்''
நெல்லியடி,
கரவெட்டி. [16229]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விளக்கு விபத்தை தடுக்க வேண்டும்

போத்தல் விளக்கு வெடிப்பதால் மக்கள் காயமடைவதும், குடிசைகள் தீப்பற்றி எரிவதும் இப்போது அடிக்கடி நடைபெற்று வருகின்றன. போத்தல் விளக்கு வெடித்துச் சிதறியதால் குழந்தைகள் மரணமான சம்பவங்களும், பெரியவர்கள் காயமுற்ற சம்பவங்களும் கூட நடந்திருக்கின்றன.

சாவகச்சேரி-கச்சாய் வீதியில் குடிசை ஒன்றில் குப்பி விளக்கு மூலம் தீப்பற்றிக் கொண்ட வேளை, அங்கிருந்தவர்களை காப்பாற்றச் சென்ற மூவர், தீக்காயங்களுக்கு ஆளாகிப் பின்னர் மரணமடைந்த சம்பவமும் கடந்த வாரம் இடம் பெற்றிருக்கிறது.

குப்பி விளக்குகள், போத்தல் விளக்குகள் வீடுகளுக்கு வெளிச்சம் தருவதற்குப் பதிலாக அங்கு வாழ்பவர்களின் உயிர்களுக்கே உலை வைப்பனவாக மாறுவது பெரும் ஆபத்தானதாகும்.

ஆகையால் இது விடயத்தை மேலெழுந்தவாரியாக, அல்லது வெறும் விபத்துகளாக நோக்குதல் ஆகாது. போத்தல் விளக்குகள் மக்கள் கொல்லிகளாக மாறுவதை அனுமதிக்கக் கூடாது.

போத்தல் விளக்கு விபத்துகள் அடிக்கடி நிகழ்வதற்கான காரண காரியங்கள் கண்டறியப்பட வேண்டும். வெடிக்கும் தன்மையுள்ள பெற்றோல் மற்றும் எரி பொருள்கள் குப்பி விளக்குக்குப் பாவிக்கப்படும் மண்ணெண்ணெயில் கலப்படம் செய்யப்படுகின்றனவா? போத்தல் விளக்குகள் சரியான முறைப்படி தயாரிக்கப்படாததால், [திரிக்குழாய்க்கும் எண்ணெய்ப் போத்தலுக்கும் இடையில் வெளி இருப்பதால் அதன் ஊடாகத்] தீ இலகுவில் பற்றிக்கொண்டு விளக்கு வெடிக்கிறதா? விளக்குகளைக் கையாள்வதில் மக்கள் கவனமாகவும், மிக அவதானமாகவும் நடந்து கொள்ளாததால் இந்த விபத்துகள் அதிகரிக்கின்றனவா?

இவை குறித்துப்பரந்த அளவிலும், நுணுக்கமான முறையிலும் மதிப்பீடுகள், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் விபத்துகள் அடிக்கடி நிகழாமல் இருப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் எவை என்பது குறித்து மக்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். விபத்துகள் ஏற்படாமல் இருக்கக்கூடிய வடிவமைப்பில், மலிவு விலையிலான பாதுகாப்பு விளக்குகளைத் தயாரிக்க முடியுமா? அவற்றைக் குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் உற்பத்தி செய்ய முடியுமா?

இவ்விடயங்கள் குறித்து அக்கறையுடன் ஆராயப்பட வேண்டும். அதற்கென அரசாங்க அதிபர் அலுவலகம், சுகாதாரத் திணைக்களம், மக்கள் நலன் காப்பதில் அக்கறை உள்ள நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட செயற்பாட்டுக்குழு ஒன்று உருவாக்கப்படுதல் அவசியம்.

இதுதொடர்பாக பூனைக்கு மணி கட்டுவது யார் என்று காத்திருக்காமல், ஒவ்வொருவரும் மற்றவரின் பொறுப்பு எனக் கருதி பின்னடிக்காமல், தட்டிக் கழிக்காமல் எல்லோரும் தமது பொறுப்பு எனக் கொண்டு செயலாற்ற வேண்டும். வெறும் போத்தல் விளக்கு விடயம் தானே என்று தப்புக் கணக்குப் போடக்கூடாது. இது மக்களின் உயிரோடு சம்பந்தப்பட்ட மிக முக்கிய விவகாரம் என்பதை மறந்துவிடல் ஆகாது.

# ஈழ அகதிகளுக்கான சர்வதேச உதவிகளை இந்தியா தடுக்கிறது

வாஷிங்டன், மார்ச் 28

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு சர்வதேச உதவிகள் வழங்க எடுக்கப்படும் சகல முயற்சிகளையும் இந்தியா தடுத்து வருகிறது.

அமெரிக்க அகதிகள் குழு பிரதிநிதி திரு. கோர்ட்லண்ட ரொபின்ஸன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்க வழக்கறிஞர் சங்கத்தின் சர்வதேச மனித உரிமைக்குழுக் கூட்டம் அண்மையில் வாஷிங்டனில் நடந்தது. அதில் கலந்து கொண்டு திரு. ரொபின்ஸன் மேலும் பேசுகையில்-

ஆபிரிக்காவுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்வது இலங்கையில்தான் என்றார். [இ-எ]

## அன்னை பூபதி நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

அகிம்சை ரீதியில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து எமது தமிழின விடிவுக்காய் எம் அன்னை பூபதி கொண்ட இலட்சியத்தை, குறிக்கோளை நாம் நிறைவேற்ற வேண்டும்.

அன்னை பூபதி நினைவுக் கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடந்த போது பிரஸ்தாப கல்லூரி அதிபர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மாணவன் சார்பில் செல்வன் ஜெயகிறியும் மாணவிகள் சார்பில் ரமாவும் உரையாற்றினார்கள்.

ஆசிரியர் சார்பில் தனேஸ்வரன், திரு. செல்வரட்ணம் ஆகியோர் உரையாற்றினார்கள். [இ]

## பாடசாலை விடுமுறை ஏப். 5 இல்

கொழும்பு, மார்ச் 28

சகல சிங்கள, தமிழ் அரசினர் பாடசாலைகள் தவணை விடுமுறைக்காக அடுத்த மாதம் 5 ஆம் திகதி மூடப்படும்.

இரண்டாம் தவணைக்காக இப்பாடசாலைகள் மே மாதம் 6 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகள் எதிர்வரும் மாதம் 22 ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

# சிலாவத்துறை தாக்குதலில் கரும்புலி டாம்போ வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

சிலாவத்துறையில் ஸ்ரீலங்காப் படையினருடன் நடந்த நான்கு நாள் போரில் கரும்புலி மேஜர் டாம்போ உட்பட 81 போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

வீரமரணம் அடைந்த போராளிகள் விவரம் வருமாறு:

கரும்புலி மேஜர் டாம்போ [காசிப்பிள்ளை தயாபரன்] மன்னார், மேஜர் ரஞ்சன் [செல்வநாயகம், தயாளன்] யாழ்ப்பாணம், மேஜர் சதா [நடராசப்பெருமாள் திலீப்குமார்]யாழ்ப்பாணம்,மேஜர் செட்டி [கந்தசாமி செல்வக்குமார்] யாழ்ப்பாணம், கப்டன் பாஸ்கர் [செ. ரவீந்திரன்] மன்னார், கப்டன் மொறிஸ் [சண்முகம் தவராஜா] யாழ்ப்பாணம், கப்டன் அப்பன் [சண்முகம் சிறிதரன்] யாழ்ப்பாணம், லெப். குட்டி [இராசநாயகம் செல்வக்குமார்] யாழ்ப்பாணம், லெப். நாதன் [தியாகராசா சிவானந்தன்] யாழ்ப்பாணம், லெப். ஜொனி [சத்தியவான் சக்திவேல்] யாழ்ப்பாணம், லெப். றெபேட் [குலநாதன் குலமோகன்] யாழ்ப்பாணம், லெப். சைமன் [நாகராசா மோகனரூபன்] யாழ்ப்பாணம், லெப். நேதாஜி [இரட்ணசிங்கம் மங்களேஸ்வரன்] யாழ்ப்பாணம்.

லெப். காஸ்ரோ [நடேசபிள்ளை செந்தூரன்] யாழ்ப்பாணம், லெப். சுரேந்தன் [கபாலி பாங்தாத்] மன்னார், லெப். சுகந்தன் [வி. பீற்றர் அழகுராசா] மன்னார், லெப். யுரோம் [வை. அந்தனி காந்] மன்னார், லெப் சஜன் [செபஸ்தியான் பிள்ளை விஜயநாத்] மன்னார், லெப். கலா [வசந்தி இராசரத்தினம்] யாழ்ப்பாணம், லெப். பரணி [செல்லத்துரை தவராசா] யாழ்ப்பாணம், லெப். டெனிக் [சுந்தர் குகதாசன்] யாழ்ப்பாணம்.

2 ஆம் லெப். ரஞ்சித்தாத்தா [கதிர்காமு குணபாலசிங்கப்] யாழ்ப்பாணம், 2 ஆம் லெப். நிலாரவி [சமிதி அன்டன் ஜெயசீலன்] மன்னார், 2 ஆம் லெப். பவிதி [பிரான்சிஸ் ஜேசுதாசன் மோசை] மன்னார், 2 ஆம் லெப். நாதன் [ச. சதாராஜ்] மன்னார், 2ஆம் லெப். சுமன் [முத்திராசா சோதீஸ்வரன்] மன்னார், 2 ஆம் லெப். சுதா [மேரிக் கியூரா தேவராசா] யாழ்ப்பாணம், சுந்தர் [செபமாலை மரியதபேந்திரன்] யாழ்ப்பாணம், சேரமன் [விநாயகமூர்த்தி ராயேந்திரன்] யாழ்ப்பாணம், தர்ஷன் [புலவர்] [யோகசாமி செந்தூரன்] யாழ்ப்பாணம், அம்பி [நாகலிங்கம் கனகரத்தினம் ரஞ்சன்] யாழ்ப்பாணம், ஆனோல்ட் [கிருஸ்ண பிள்ளை குகன்] யாழ்ப்பாணம், அன்ரனி [துரைச்சாமி அகிலன்] யாழ்ப்பாணம்.

சிவசங்கர் [இராசேந்திரகுமார்] யாழ்ப்பாணம் டெனின் [பேரி ஞானரூபன்] வன்னி, பீற்றர் [சத்தியநாதன் சிறீஸ்கந்தராசா] யாழ்ப்பாணம், கோணேஸ் [சின்னத்தம்பி அன்னலிங்கம்] யாழ்ப்பாணம், பப்பர் [இராசலிங்கம் பத்மலிங்கம்] யாழ்ப்பாணம், சூரியகுமார் [கனகராசா இலங்கேஸ்வரன்] யாழ்ப்பாணம், சுஜா [பவான் தவநாயகி] யாழ்ப்பாணம், அசோக் [மோகனதாசன்] யாழ்ப்பாணம், சயந்தன் [செல்வராசா லோகேஸ்வரன்] யாழ்ப்பாணம், பஸ்தியான் [சி. யுரோம் திலகர்] மன்னார்.

இளங்கோ [தா சண்ணன்] மன்னார், கனகன் [க. ரஞ்சித்குமார்] மன்னார், ஜின்னா [கா. கோபாலு பிள்ளை] மன்னார். பூபால் [நா. வடிவேல்] மன்னார், பரமசிவன் [கிருஸ்ணகோபால் வசந்தகுமார்] மன்னார், பாணன் [பாலசிங்கம் குணபாலன்] மன்னார், பாலசுந்தரம் மன்னார், சேகரன் மன்னார், சந்திரகாந் [கா. ராமு] மன்னார், ராப் மன்னார்.

ரெத்தினம் [அந்தோசவிப் பிள்ளை மரியநாயகம்] மன்னார், ஜெரோமி [நடராசா சகாயராசா] மன்னார், சசிக்குமார் வன்னி, சூரி-வன்னி, சங்கர் - வன்னி.

ஜெயசக்தி, நளினி, வாணி, காவேரி, அனித்தா, சத்தியமலர், சிவாகரன் [தா. யோசப் சாள்ஸ்], மரியநாயகம் [த. சின்னத்துரை]

குட்டி [நல்லையா நவரத்தினம்] யாழ்ப்பாணம், உசான் [சந்தானம் தேவநாயகம்] யாழ்ப்பாணம், மது [இமானுவேல் சுரேஸ்] யாழ்ப்பாணம, ஜெயிலான் [இரத்தினகுலசிங்கம் நிமலன்] யாழ்ப்பாணம், மதனன் [முருகேசு கமலகாசன்] யாழ்ப்பாணம், காந்தராஜா [நாகராஜா ஜெயக்குமார்]யாழ்ப்பாணம். நவீனன் [வீரசிங்கம் சபேசன்] யாழ்ப்பாணம், சிறி [தங்கரட்ணம் நந்தகுமார்] யாழ்ப்பாணம், ராயு [குமாரசாமி சிவநாதன்] யாழ்ப்பாணம், கலாதரன் [விநாயகமூர்த்தி சிவனேஸ்] யாழ்ப்பாணம்,

உத்தமன் [பழனியாண்டி வேலு]யாழ்ப்பாணம், விஷ்ணு [கனகரத்தினம் நித்தியானந்தன்] யாழ்ப்பாணம், மணிமுடி [பாலசிங்கம் கிரிதரன்] யாழ்ப்பாணம், பீற்றர் [தெய்வேந்திரம் தவராசா] யாழ்ப்பாணம். கலைச்செல்வன் [குலசிங்கம் மணிவண்ணன்] யாழ்ப்பாணம்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

சிலாவத்துறை தாக்குதலின் போது ஸ்ரீலங்காப் படையினரிடம் இருந்து விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ஆர். பி. ஜி. | 4 |
| ★ ஆர் பி. டி. எல். எம். ஜி. | 4 |
| ★ 60 மி. மீ. மோட்டர் | 03 |
| ★ ஜி பி. எம். ஜி. | 01 |
| ★ ரி. 81 | 02 |
| ★ ரி. 56-2 | 01 |
| ★ ஏ. கே. 47 | 02 |
| ★ ஆர்.பி. ஜி. எறிகணை | 15 |
| ★ 60 மி மீ. மோட்டர் எறிகணை | 15 |
| ★ ஏ. கே. ரவை | 5000 |
| ★ நேட்டோ ரவை | 1000 |

# தமிழீழ வரலாற்றில் என்றுமே....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மால் தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழீழ வரலாற்றில் என்றுமே நடந்திராதவாறு மிகப் பெரிய போராட்டம் நான்கு நாட்கள் நடந்தன.

10 மைலுக்கு மேல் சுற்றளவு உள்ள பரந்த பிரதேசத்தில் இப்போராட்டம் நடைபெற்றது.

வடக்கே தள்ளாடி, வங்காலையில் இருந்து வெளியேறி சிலாவத்துறை நோக்கி முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படையினர் ஒரு புறம் -

தெற்கே கொண்டச்சியில் இருந்து சிலாவத்துறை நோக்கி முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படையினர் ஒரு புறம் -

மேற்கே கடலில் இருந்து இரண்டு பெரிய கப்பல்கள். 12 பீரங்கிக் கப்பல்கள் தாக்குதலை நடத்த கரை இறங்கி சிலாவத்துறை நோக்கி முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படையினர் ஒரு புறம் -

வானில் இருந்து நான்கு அவ்ரோ, இரண்டு [illegible] - 12, நான்கு சியாமர்செட்டி [illegible] னங்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து குண்டுகளை வீச ஹெலிக்கொப்டர்கள் தாக்குதலை தொடுத்த வண்ணம் சிலாவத்துறைப் படையினருக்கு உதவி வழங்கும் முயற்சியில் ஒரு புறம்-

வடக்கு-தெற்கில் தரையில் இருந்தும், மேற்கு கடலிலிருந்தும், வானிலிருந்தும் வந்த தாக்குதல்களினூடே அவர்களை எதிர்த்த வண்ணம் சிலாவத்துறை படைமுகாம் மீது இன்னுமொரு முனையில் தாக்குதல் நடத்தப்பட்டது.

### 40க்கும் மேல் சிங்களப்படையினர் மரணம்

சிலாவத்துறை முகாமுக்கு அண்மையில் இருந்த சிலாவத்துறை பாடசாலை முகாம், சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை முகாம் இரண்டும் 19 ஆம் திகதி இரவு எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

இந்த முயற்சியில் எமது தரப்பில் 25பேர் [illegible] மரணமடைந்தனர்.

ஸ்ரீலங்கா தனது முழுமையான பலத்தையும் பயன்படுத்தி இப்போரை நடத்தியது.

இப்பெரிய தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

### கரும்புலி டாம்போ

கரும்புலி மேஜர் டாம்போ முகாம் தகர்ப்பு முயற்சிக்கான கரும்புலித் தாக்குதலில் வீரமரணமடைந்தார்.

20ஆம் திகதி சிலாவத்துறை முகாமை கைப்பற்ற எடுத்த முயற்சியில் எமது தரப்பில் 20 பேர் வீரமரணமடைந்தனர்.

20 ஆம் திகதி வங்காலையில் இருந்து வெளியேறிய ஸ்ரீலங்காப் படையினருடன் நடந்த மோதலில் ரி 56 - 02 ரகத்துப்பாக்கி ஒன்று எம்மால் கைப்பற்றப்பட்டது.

21 ஆம் திகதி கடலில் இருந்து தாக்குதலை தொடுத்த வண்ணம் தரை இறங்கு முற்பட்ட ஸ்ரீலங்காப் படையினருடன் நடந்த மோதலில் எமது தரப்பில் 10 பேர் வீரமரணமடைந்தனர்.

போரில் கடைசி நாளான 22ஆம் திகதி கொண்டச்சியில் இருந்து சிலாவத்துறை நோக்கி முன்னேறிய ஸ்ரீலங்காப் படையினருடன் நடந்த மோதலில் எமது தரப்பில் 12 பேர் வீரமரணமடைந்தனர்.

அன்றைய தினம் சிலாவத்துறையை சுற்றி நடந்த மோதலில் மேலும் 14 பேர் எமது தரப்பில் வீரமரணமடைந்தனர்.

தமிழீழ வரலாற்றில் முதன் முறையாக வான் படை, கடற்படை உட்பட மூன்று பெரிய படை முகாம்களில் இருந்து வெளியேறிய ஸ்ரீலங்காப் படையினருடன மோதிய வண்ணம் சிலாவத்துறை முகாம் மீது தாக்குதலை நடத்தி, சிங்களப் படையினருக்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தி, வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொமாண்டோக்கள் அதிரடித்தாக்கு!
# விமானக் கடத்தல் காரர்கள் பலி!!

## சிங்கப்பூரில் நேற்று அதிகாலை நடந்த சாகஸம்

சிங்கப்பூர், மார்ச் 28
சிங்கப்பூர் எயர்லைன்ஸ் விமானம் ஒன்றைக் கடத்திய நான்கு பாகிஸ்தானியரும் சிங்கப்பூர் இராணுவ கொமாண்டோக்களின் திடீர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

விமானத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 131 பயணிகளும், 7 சிப்பந்திகளும் காயங்கள் ஏதுமின்றி காப்பாற்றப்பட்டனர்.

நேற்று அதிகாலை 4-45 மணியளவில் இடம்பெற்ற அத்திடீர்த்தாக்குதல் சில நிமிடங்களே நீடித்தது. அந்த நடவடிக்கையை விமானநிலையத்தில் தங்கியிருந்த வண்ணம் சிங்கப்பூர் உள்துறை அமைச்சர் திரு ஜெயக்குமார் செயற்படுத்தினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கோலாலம்பூர் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட அந்த விமானத்தை நடு வானில் வைத்து நான்கு பாகிஸ்தானியர்கள் கடத்தினர். அவர்களிடம் வெடி மருந்தும் மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களும் இருந்தன.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியவுடன் கடத்தல்காரர்கள் தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டனர்.

பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரையும் (முன்னாள் பிரதமர் பெனாசிரின் கணவரான சர்தாரி உட்பட) விடுவிக்க வேண்டும் என்பதே கடத்தல்காரர்களின் கோரிக்கையாக இருந்தது.

அது குறித்து சிங்கப்பூர் அதிகாரிகள் உள்துறை அமைச்சர்ஜெயக்குமார் தலைமையில் விமான நிலையத்தில் வைத்து இரவு முழுவதும் கடத்தல்காரர்களுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

எட்டு மணித்தியாலங்கள் நீடித்த பேச்சு தோல்வியில் முடியவே, கடத்தல்காரர்கள் அமைதியிழந்து, பணயக்கைதிகளை விடுவிக்க ஐந்து நிமிடக் காலக்கெடுவை வழங்கினர். ஆஸ்திரேலியா செல்வதற்கு தேவையான எரிபொருளைத் தரவேண்டும் என்றும் கடத்தல்காரர்கள் கோரினர்.

பணயக் கைதிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதை உணர்ந்த சிங்கப்பூர் இராணுவக் கொமாண்டோக்கள் மின்னல் வேகத்தில் செயற்பட்டனர். கடத்தல்காரர்கள் கொல்லப்பட்டதுடன் பணயக்கைதிகள் அனைவரும் காயமின்றி மீட்கப்பட்டனர்.

மின்னல் வேகத் தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்ற விவரத்தை சிங்கப்பூர் அதிகாரிகள் வெளியிடவில்லை. [இ-எ]

### பெனாசிர் மறுப்பு

இஸ்லாமபாத், மார்ச் 28
சிங்கப்பூர் எயர் லைன்ஸ் விமானம் கடத்தப்பட்ட சம்பவத்திற்கும் தமக்கும் எது வித தொடர்பு இல்லை என்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ நேற்றுத் தெரிவித்தார்.

தனது பெயரை கடத்தல்காரர்களுடன் தொடர்பு படுத்தியது பாகிஸ்தான் அரசின் திட்டமிட்ட செயலாகும் என்றும் பெனாசிர் சொன்னார்.

விமானம் கடத்தப்பட்டதற்கு பின்னால் பெனாசிரின் கட்சி செயற்பட்டுள்ளது என்று பிரதமர் நவாஸ் ஷெரீன் ஆளும் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. [அ-எ]

### நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 28
தமிழீழ ஆய்வு நிறுவனம் நடாத்தும் பனைத் தொழில் வல்லுனர் பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றவுள்ள அனைவரும் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவனத் தலைமைப் பணியகத்தில் நடைபெறவுள்ள நேர்முகத் தெரிவுக்குத் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். [ஒ]

## செஞ்சிலுவைசர்வதேசக்குழு தலைவர் இடமாற்றம்

கொழும்பு, மார்ச், 28
இலங்கையில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைவர் பிலிப் கொன்ரசா இலங்கையில் தமது18 மாத காலப் பணியை முடித்துக் கொண்டு தொடர்ந்து பணிபுரிய இங்கிருந்து எலசல்வடோர் செல்கிறார்.

நேற்று முன்தினம் அவர் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்து பிரியா விடை பெற்றுக்கொண்டார்.

அங்கோலாவில் பணிபுரிந்து கொண்டிருந்த பிலிப் கொன்ரசா 1989 அக்டோபரில் 60 உறுப்பினர்களைக் கொண்டசெஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஒன்றுக்கு தலைமை வகித்து இலங்கையில் பணி புரிய வந்திருந்தார். [உ]

### ஹர்த்தால்

தென்மராட்சி, மார்ச் 28
மன்னார் சிலாவத்துறையில் இடம்பெற்ற மோதலில் வீர மரணமடைந்த வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று தென்மராட்சிப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது [உ-117]

## யாழ். மாவட்ட ஓய்வூதியர் எண்ணிக்கை 20 ஆயிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்-மாவட்டத்தில் ஓய்வூதியர் எண்ணிக்கை 20ஆயிரமாக உயர்ந்துள்ளது.

கடந்த வருட இறுதியில் இந்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 500 ஆக இருந்தது

கடந்த ஜனவரி மாதத்தில் சுய விருப்பத்தின் கீழ் மேலும் 2 ஆயிரத்து 500 பேர் ஓய்வு பெற்றதை அடுத்து இந்த எண்ணிக்கை 20 ஆயிரமாக உயர்ந்தது

ஓய்வூதியருக்கான மாதாந்தக் கொடுப்பனவும் 4 கோடி ரூபாவில் இருந்து 5 கோடி 30 லட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளது. [உ-3]

### போரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சையை முன்னிட்டு யுத்த நிறுத்தம் அமுலாவது போல, தமிழ்-சிங்கள புத்தாண்டு, ரமழான், வெசக் ஆகிய பண்டிகைகளை ஒட்டியும் அரசு ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தங்களை அறிவிக்கக் கூடும் என்றும்-

அவ்வாறு செய்வதன் மூலம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடும் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

ஏப்ரல் 19 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது, யுத்தத்தை நிறுத்துவது, இனப் பிரச்சினைக்கான அரசின் தீர்வு என்பன குறித்து ஜனாதிபதி பிரஸ்தாபிப்பார் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இந்தியத் தேர்தலுக்கு முன்னர் இனப் பிரச்சினைத் தகராற்றைத் தீர்த்துவிட வேண்டும் என்பதிலும் அரசு மிக அக்கறையாக உள்ளதாம். [அ]

### உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

## நியமனப் பத்திரம் தாக்கல்; இன்று கடைசித் தினம்

கொழும்பு, மார்ச் 28
வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் கடைசித் தினம் இன்றாகும்.

இதற்கிடையில்—
இத்தேர்தல்களை அவதானிப்பதற்கான சார்க் அவதானிப்புக் குழுவின் முதல் பிரிவு இலங்கை வந்துள்ளது. [உ-எ]

## ஹரியானா மாநில அரசை கலைப்பதற்கு சிபாரிசு!

சண்டிகார், மார்ச் 28
ஹரியானா மாநில சட்ட சபையைக் கலைத்து, அதற்கான பொதுத் தேர்தலை நாடாளுமன்ற பொதுத்தேர்தலுடன் சேர்த்து நடத்தும்படி முதலமைச்சர் ஓம்பிரகாஷ் சௌதாலா ஆளுநருக்குச் சிபார்சு செய்துள்ளார்.

இதனிடையில்—
மாநில அரசைக் கலைத்து ஹரியானாவில் ஆளுநர் ஆட்சியை ஏற்படுத்தும்படி ஜனதா தளம், ஜனதா தள், இந்திரா காங்கிரஸ், மார்க்ஸிய கம்யூனிஸ்ட், இடதுசாரி கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளும் கோரியுள்ளன. [உ-எ]

### கல்விச்சேவை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
டைத் தகமைகளின் படி 70 வீதமான ஆசிரியர்கள் இப் பரீட்சைக்குத் தோற்ற வழி ஏற்பட்டிருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

தளர்த்தப்பட்ட அடிப்படைத் தகமைகள் பற்றிய விவரங்களை தெளிவுபடுத்தி அறிவித்தல் வெளியிடப்படும். [உ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### நாளை மறுதினம் பரீட்சை:

## இடம் பெயர்ந்த மாணவர் நாளை வரை விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
இடம்பெயர்ந்த ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்க நாளை வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மாணவர்கள் நாளை வரை யாழ். கல்வி அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பத்தைச் செய்துகொள்ளலாம் என்று வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

—இவ்வாறு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு என நல்லூர் ஸ்தான பாடசாலையில் விசேட பரீட்சை நிலையம் ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது.

அதேசமயம்—
மன்னார்ப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவருக்கு முழங்காவில் ம. வி யிலும்—
முல்லைத்தீவிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கு முரசுமோட்டை ம. வி யிலும் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட இருப்பதாக கிளிநொச்சி மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. வே. கந்தசாமி தெரிவித்தார். [உ-3]

### ராஜீவ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி
பிரசாரம் நடத்துவதற்கு ராஜீவ் காந்தி வரும்போது அவரை வாதராஜப் பெருமாள் சந்தித்துப் பேச முடியும் என்று மத்திய உளவு அமைப்புகள் வரதராஜப் பெருமாளிடம் கூறியுள்ளன,

மத்திய பிரதேசத்தில் சந்தேரி கிராமத்தில் பலத்த பாதுகாப்புடன் வரதராஜப் பெருமாள் தங்க வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்ததே.

அவர் ராஜீவ் காந்தியை எப்படியும் சந்தித்துப் பேச வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருப்பதாக அவரைப் பாதுகாத்து வரும் மத்திய பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் மத்திய உள்துறை அமைச்சகம் இந்தச் சந்திப்புக்கு இன்னும் அனுமதியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

''டில்லியில் உள்ள நண்பர்களிடமிருந்து ஏராளமான பணம் வரவேண்டியுள்ளது. ஒரு நாள் டாக்ஸியில் ஏறி டில்லிக்குச் சென்றுவிடப் போகிறேன்'' — என்று தம்மைப் பாதுகாத்துவரும படையினரிடம் அவர் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவருக்குரிய பாதுகாப்பு மேலும் தீவிரப் படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. [உ]

## அதிபர் சேவை போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 28
இலங்கை அதிபர்கள் சேவை தரம் I, II ஆகியவற்றுக்கும் தரம் III இற்கும் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்ப முடிவு திகதி ஏப்ரல் 19 ஆகும்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. விரும்புவோர் இந்த அறிவித்தலை உதயன் பணிமனையில் பார்வையிடலாம். [உ]

## சான்றிதழ்

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்ப்பாணக் கோட்டத்திற்குட்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கு தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினரால் நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் ஓராண்டு பூர்த்தி விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில நடைபெறும். [உ]

### பரீட்சை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பிக்கலாம். ஏப்ரல் 15 ஆம் திகதி இப் பரீட்சை ஆரம்பமாக இருப்பது தெரிந்ததே. [உ-3]


## கண்ணீர் அஞ்சலி

யாழ். றோட்டரிக் கழகத்தின் மிக மூத்த உறுப்பினராக விளங்கி அளப்பரிய சேவைகள் புரிந்த

### சட்டத்தரணி ச. செல்வராசா

அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த
அஞ்சலியைச் செலுத்துகிறோம்

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரியனவாகுக.

றோட்டரிக் கழகம்
யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் விசாலாட்சி

வயாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் விசாலாட்சி 27-03-91 அன்று காலமானார் இவர் காலம் சென்ற (தம்பாப்பிள்ளை) சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற ஆசிரியர் நடேசலிங்கம், இலங்கநாயகம் (கொண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்), மகாலிங்கசிவம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னம்மா (ஆசிரியை), அருந்தவராணி, மாதினி ஆகியோரின் மாமியாரும், செந்தூரன், கேசவன், மயூரன், ரூபன் துஷ்யந்தி, தாட்சாயினி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-03-91 வியாழக்கிழமை பி. ப. 1.00 மணிக்கு இராமகிருஷ்ண மகாவித்தியாலய வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கொண்டாவில் கிழக்கு. க. இலங்கநாயகம்
[15940]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org